10·30 மணி

—ஏறத்தாழ ஐந்து கோடி மக்களைப் பரிபாலிக்கின்ற ஒரு அரசு—எவ்வளவு பெரிய நிலப்பரப்பிலே அமைந்துள்ள ஒரு மாநில அரசாக இருந்தாலும் கூட, ஆங்காங்கு அரசின் கவனத்திற்கு வராமல் இதுபோன்ற குறைபாடுகளை—அதிகாரிகள், மருத்துவர்கள், அரசுக்குப் பொறுப்பாகப் பணியாற்ற வேண்டியவர்கள், தங்களுடைய கடமையை மறந்து கவனக் குறைவால், அலட்சியப் போக்கால் அல்லது ஆணவத்தால் அல்லது அதிகாரத் திமிரால் இதுபோன்ற காரியங்களிலே ஈடுபட்டு விடுகிறார்கள் என்பதை இந்த நீதி விசாரணை நமக்கு நல்லமுறையிலே விளக்குகின்றது. வருங்காலத்திலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிகழாமல் இருக்க—நீதிபதி அவர்கள் சொன்ன பரிந்துரைகளையெல்லாம் நம்முடைய நூர்முகமது அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் அரசு மனத்திலே நிறுத்தி ஆவன செய்யும்; எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் இந்த அவையிலே இந்த அறிக்கையை வைத்து பிற்பாடு எடுக்க வேண்டுமென்ற முறைப்படி நிச்சயமாக எடுக்கப்படும். தயவு தாட்சண்யமே இதிலே நிச்சயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொண்டு—"G pi was the bread-winner of the family. It is the duty cf the State to protect the life and prcperty of every individual and when the doctors emploped by the G vernment have failed to discharge their duty, there is a duty cast on the Government to compensate adequately the family of the deceased Gopi." என்றும் நீதிபதி தெரிவித்திருக்கிறார். அவர்களுடைய குடும்ப நிலவரங்களெல்லாம் எத்தகையது, என்ன என்பவைகளைப் பற்றியெல்லாம் கூட நான் காலையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் என்னிடத்திலே தெளிவாகக் கூறவில்லை. இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அதைக் குறித்து விவரம்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இப்பொழுது இந்த நேரத்தில் அரசின் சார்பாக அந்தக் குடும்பத்திற்கு 25,000 ரூபாய் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) சென்னையில் பெய்துள்ள மழை தொடர்பாகக் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே பிரச்சினை குறித்து திரு. மு.க. ஸ்டாலின், திரு. கணபதி.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சென்னை, சென்னையைச் சுற்றி பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து ஐந்தாறு நாட்களாக மழை பெய்திருக்கிறது. அதனால் சென்னை நகருக்குத் தண்ணீர்

வழங்கிக் கொண்டு இருக்கிற பல்வேறு ஏரிகளில் தண்ணீரின் அளவு உயர்ந்திருக்கிறதா? சென்னையில் அப்படி உயர்ந்திருந் தால் அதனுடைய அளவையும் நான் அறிந்து கொள்ள விரும்பு கிறேன். சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு தீர்கின்ற வாய்ப்பு இதனால் ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, எங்கள் இளைஞர் தளபதி முன்மொழிந்த அந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 8–5–1990-இல் சென்னைக்குக் குடிநீர் வழங்குகின்ற மூன்று ஏரிகளின் மொத்த நீர் அளவு 996 மில்லியன் கன அடியாக இருந்தது. அது கடந்த நான்கு நாட்களில் படிப்படி யாக உயர்ந்து 9–5–1990-இல் 1,100 மில்லியன் கன அடி யாகவும், 10–5–1990-இல் 1,113 கன அடியாகவும், 11–5–1990-இல் 1,332 கன அடியாகவும், இன்று காலையில் 1,544 கன அடியாகவும் உயர்ந்திருக்கிறது. இன்னும் ஏரி களுக்கு நீர் வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக புழலேரிக் கும், சோழவரம் ஏரிக்கும் நீர் வரத்து இருந்துகொண்டு இருக்கிறது. இந்த நீர் அளவு சென்ற ஆண்டு இதே நாளில் இருந்த நீர் அளவைவிட 297 மில்லியன் கன அடி அதிகமாக இருக்கிறது. சென்ற ஆண்டில் இதே நாளில் 1,247 மில்லியன் கன அடி நீர் தான் இருந்தது; இந்த ஆண்டு 1,544 மில்லியன் கன அடி நீர் இருக்கிறது.

இருந்தாலும், இப்பொழுது கொடுத்து வருகிற 'ஆல்டர் நேட்டிவ் டேஸ்'—இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் வழங்குகிற முறையைத்தான் பின்பற்ற முடியும். ஏனென் றால் இந்த மூன்று ஏரிகளினுடைய மொத்தக் கொள்ளளவு 6.4 டி.எம்.சி., அதாவது ஏறத்தாழ 6,400 மில்லியன் கன அடி நீர். அதிலே பாதி அளவிற்காவது இருந்தால்தான் தினந் தோறும் குடிநீர் சென்னைக்கு வழங்க முடியும். 3.2 டி.எம்.சி.—3,200 மில்லியன் கன அடி நீர் இருந்தால்தான் சென்னைக்கு தினந்தோறும் வழங்குகின்ற நிலைமை சாத்தியம் ஆகும். ஆனால் இப்பொழுது இருக்கிற நீர் அளவு 1.55 டி.எம்.சி. அதாவது 1,550 மில்லியன் கன அடி தான் இருக்கிற காரணத்தினால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் வழங்கு கிற முறையே தொடர்ந்து பின்பற்றப்படும்.

இப்படிப் பின்பற்றுகின்ற முறையின் காரணமாக அக் டோபர் இறுதி வரை சென்னை நகரத்திற்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

1990 மே 12] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

மேலும், நிலத்தடி நீர் இப்பொழுது ஆறு இடங்களிலே யிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. அங்கேயும் ஓரளவுக்கு நிலத்தடி நீரினுடைய நிலைமை அதிகரித்து இருக்கிற காரணத்தினால் இந்த நிலைமை பயப்படுகின்ற அளவிற்கு இல்லை. நிச்சயமாக இந்த மழையின் காரணமாக சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாது, இப்பொழுது வழங்குகின்ற அளவிலே வழங்கப்பட்டு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) வீராணம் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட குழாய்களையும் வாங்கப்பட்ட தளவாடங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

10-35 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலே வீராணம் திட்டம் துவங்கப்பட்டு அதற்குத் தயாரிக்கப்பட்ட சிமென்ட் குழாய்கள், அதற்கு வாங்கப்பட்ட அதிகசக்தி வாய்ந்த மோட்டார்கள், இரும்புச் சாமான்கள், இதர தளவாடங்கள், அப்படியே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இந்த ஆண்டு நெய்வேலியிலே அந்தச் சிமென்ட் குழாய்களில் ஒரு 100 குழாய்களைப் பெற்றுத் தண்ணீரை மாற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் இந்த சிமென்ட் குழாய்களையும், அங்கே இருக்கிற அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களையும், அதற்கென வாங்கப்பட்ட இதர தளவாட சாமான்களையும் எந்த அளவிற்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள்? பொதுவாக இந்த சிமென்ட் குழாய்களைத் தரைப்பாலம் அமைப்பதற்கு உபயோகிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதோடு, தண்ணீரை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு கூட அந்த பைப்புகளை பயன்படுத்தலாம். அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களை விற்பதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் நம்முடைய அரசாங்கத்திற்கு வரும் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் விரைந்து செயல்படுத்த, அவற்றை முழுமையாகப் பயன்படுத்த பொதுப்பணித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்திற்காக மொத்தம் தயாரிக்கப்பட்ட பைப்புகள், 10,320. அதிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக புதைக்கப்பட்ட